## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 87/மா/2025

**நாள்:** 16.12.2025

ஜெ. பிரவீன் குமார்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது தெரு, கதவு எண் 12/94 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ. பிரவீன் குமார் என்பவரின் 18.01.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.01.2025 அன்று பெறப்பட்டு 87/மா/2025, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

### ஆணை

சென்னை, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது தெரு, கதவு எண் 12/94 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ. பிரவீன் குமார் என்பவர் தனது 18.01.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் –2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 5--வது மற்றும் 4–வது தெருக்களில் கடந்த பல வருடங்களாக தெரு நாய்களினுடைய எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது.
>
> தெருநாய்களினுடைய பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான தாம்பரம் மாநகராட்சியினுடைய நடவடிக்கைகள் மும்மூர்த்தி நகரில் பல பத்தாண்டுகளாக மேற்கொள்ளப்படாததன் காரணமாக அவற்றின் எண்ணிக்கை பெருகி தற்போது மும்மூர்த்தி நகரை சேர்ந்த குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களை அச்சுறுத்தும் வகையில் மாறியிருக்கிறது.
>
> மேலும் தெரு நாய்கள் ஒன்று கூடி வாகனங்களில் செல்பவர்களை விடாமல் பின்தொடர்ந்து விரட்டி விபத்துகளையும் ஏற்படுத்தி வருகின்றன.
>
> பள்ளிக்கு செல்லும் சிறுவர்களையும் விரட்டி கடிக்க வருகின்றன.
>
> தெரு நாய்கள் பிரச்சனை மும்மூர்த்தி நகரை சேர்ந்த குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுடைய உயிர் பாதுகாப்பு பிரச்சனையாக மாறியிருக்கிறது. தெரு நாய்களினுடைய பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பலமுறை பல்லாவரம் நகராட்சியில் (தற்போது

தாம்பரம் மாநகராட்சி) புகார்கள் கொடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த வருடம் செப்டம்பர் 13, 2024 (13.09.2024) இது தொடர்பில் தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உரிய நடவடிக்கை எடுத்திடக் கோரி பதிவுத் தபாலில் புகார் மனு அனுப்பியிருந்தோம்.

மேற்படி எங்கள் புகார் மனுவை செப்டம்பர் 16,2024 (16.09.2024) அன்று பெற்றுக் கொண்ட தாம்பரம் மாநகராட்சி ஆணையர் நூறு நாட்களுக்கு மேல் ஆகியும் இதுவரையில் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஜனவரி 06, 2025 (06.01.2025) அன்று மாலை மும்மூர்த்தி நகர் 5–வது தெருவில் தனியாக வந்த குழந்தையை தெரு நாய் ஒன்று விரட்டி கடிக்க முயல குழந்தை அலறி அடித்துக் கொண்டு ஓடும் காட்சி எங்கள் தெருவில் உள்ள ஒருவருடைய வீட்டு CCTV–யில் பதிவாகியிருந்தது.

இந்த CCTV–யில் காட்சியை தாம்பரம் மாநகராட்சியின் அதிகாரப்பூர்வ வாட்ஸ்அப் புகார் எண்ணிற்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுத்திடும்படி புகார் செய்தோம்.

தாம்பரம் மாநகராட்சி இதை புகார் எண் SR No.20250107–0004573 ஆக பதிவு செய்ததுடன் நின்று விட்டது. இது தொடர்பில் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

தெரு நாய்களின் பெருக்கத்தால் மும்மூர்த்தி நகரைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கு வெறி நாய் கடி ஆபத்து ஏற்பட்டு அதனால் உயிரிழப்புகள் ஏற்படுமாயின் அதற்கான முழு பொறுப்பும் தொடர்புடைய தாம்பரம் மாநகராட்சி மற்றும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 அலுவலக அதிகாரிகள் மற்றும் அலுவலர்களையே சேரும்.

BNS சட்டம் பிரிவு 106–ன்படி அலட்சியத்தினால் மரணம் விளைவித்தல் என்பதன் கீழ் தொடர்புடைய தாம்பரம் மாநகராட்சி மற்றும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 அலுவலக அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து சட்ட முகாந்திரங்களும் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆகவே மும்மூர்த்தி நகர் 5–வது தெரு மற்றும் 4–வது தெருக்களில் பெருகியிருக்கும் தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்திடவும் அதனால் ஏற்படக்கூடிய வெறிநாய்கடி ஆபத்தினை தடுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் தங்களை மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையர் தனது 16.04.2025 மற்றும் 14.11.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளார்:

<u>16.04.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண் 1652/2025/எச்1</u>

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 எல்லைக்குட்பட்ட வார்டு எண் 28ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 4வது மற்றும் 5வது தெருக்களில் பராரியாக சுற்றித்திரியும் தெரு நாய்களை கடந்த செப்டம்பர் 2024 மற்றும் அக்டோபர் 2024 மாதங்களில் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநோய்கடி

தடுப்பூசி (ARV) செலுத்தி அதனை 7 நாட்கள் வரை பராமரித்து பின்னர் பிடித்த இடத்திலேயே விடப்படுகிறது.

மேற்படி பகுதியில் சுற்றித்திரியும் தெருநாய்களை 16.04.2025 அன்று பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தில் விடப்பட்டுள்ளது. மேலும் தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை சுழற்சி முறையில் பிடிக்கப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

<u>14.11.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண் 1652/2025/எச்1</u>

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 எல்லைக்குட்பட்ட வார்டு எண் 28ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் பகுதிகளில் பராரியாக சுற்றித்திரியும் தெரு நாய்களை ஜனவரி 2025 மாதத்தில் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநோய்கடி தடுப்பூசி (ARV) செலுத்தி அதனை 7 நாட்கள் வரை பராமரித்து பின்னர் பிடித்த இடத்திலேயே விடப்பட்டது. அதன் பின்னர் மேற்படி பகுதியில் சுற்றித் திரியும் தெரு நாய்களை 16.04.2025 அன்று பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தில் விடப்பட்டுள்ளது. மீண்டும் 26.04.2025, 17.05.2025, 23.06.2025, 28.07.2025, 10.08.2025 ஆகிய தேதிகளில் மும்மூர்த்தி நகர் தெருக்களில் தெருநாய்கள் பிடிக்கப்பட்டது.

தற்போது அக்டோபர் மாதம் 13ஆம் தேதி மும்மூர்த்தி நகரில் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநோய்கடி தடுப்பூசி (ARV) செலுத்தி அதனை 7 நாட்கள் வரை பராமரிக்க கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தில் விடப்பட்டுள்ளது. மேற்படி பணியானது தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் சுற்றித்திரியும் தெரு நாய்களை சுழற்சி முறையில் பிடிக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்துடன் இனிவரும் காலங்களில் மாண்பமை உச்சநீதிமன்றம் உத்தரவின்படி காப்பகத்திற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து ARV தடுப்பூசி செலுத்தி காப்பகத்தில் வைத்து பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 17.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு 28ல் உள்ள மும்மூர்த்தி நகர் 5வது மற்றும் 4வது தெருக்களில் பல வருடங்களாக தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. 13.09.2024 மற்றும் 16.09.2024 அன்று தாம்பரம் மாநகராட்சிக்கு புகார் மனு அனுப்பியும் இது நாள் வரை எவ்வித நடவடிக்கையும் தாம்பரம் மாநகராட்சியால் எடுக்கப்படவில்லை. ஆனால் தற்போது தாம்பரம் மாநகராட்சி தெருநாய்களை பிடித்து தடுப்பூசி போட்டுள்ளார்கள்.

இருப்பினும் தெரு நாய் பெருக்கத்தினால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை வெறி நாய் கடிப்பிற்கு உள்ளாக வாய்ப்பு உள்ளது.

ஆகவே மும்மூர்த்தி நகர் 5வது மற்றும் 4வது தெருக்களில் பெருகிவரும்

1) தெரு நாய்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தியும்,

2) தற்போது தாம்பரம் மாநகராட்சியால் தெருக்களில் சுற்றித் திரியும் நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகமாவதால் வாரத்திற்கு ஒரு முறை எங்கள் பகுதியில் முறையான ஆய்வு மேற்கொண்டு தெரு நாய்களை கட்டுப்படுத்தவும்,

தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்கிட இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2–ன் துப்புரவு அலுவலர் 17.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 4வது மற்றும் 5வது தெருக்களில் பராரியாக சுற்றித்திரியும் தெரு நாய்களை கடந்த செப்டம்பர் 2024 மற்றும் அக்டோபர் 2024 மாதங்களில் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறி நோய்கடி தடுப்பூசி (ARV) செலுத்தி அதனை 7 நாட்கள் வரை பராமரித்து பின்னர் பிடித்த இடத்திலேயே விடப்படுகிறது. மேலும் தொடர்ச்சியாக மண்டலம் 2ல் 5003 நாய்கள் பிடிக்கப்பட்டு வெறி நோய் கடி தடுப்பூசி (ARV) போடப்பட்டு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மீண்டும் விடப்பட்டுள்ளது. மேலும் தாம்பரம் மாநகராட்சியில் மட்டும் சுமாராக 38000 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்ட விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி தெரு நாய்களை பிடித்து பராமரிப்பதற்கு காப்பகம் அமைக்க இடம் தேர்வு செய்ய தாம்பரம் மாநகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இருப்பினும் காப்பகம் அமைக்கும் வரை தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை சுழற்சி முறையில் பிடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்கிற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது குறித்த புகைப்பட நகல்களை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையரின் அறிக்கை, துப்புரவு அலுவலரின் வாக்குமூலம் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு 28ல் உள்ள மும்மூர்த்தி நகர் 5வது மற்றும் 4வது தெருக்களில் பல வருடங்களாக தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது குறித்து, தாம்பரம் மாநகராட்சிக்கு புகார் மனு அனுப்பியதற்கு, தற்போது தாம்பரம் மாநகராட்சியினர் தெருநாய்களை பிடித்து தடுப்பூசி போட்டுள்ளார்கள் என்பதும், இருப்பினும் தற்போது தெரு நாய்களின் எண்ணிக்கை பெருக்கத்தினால் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை வெறி நாய் கடிக்கு வாய்ப்புள்ளதால், வாரத்திற்கு ஒரு முறை தங்கள் பகுதியில் முறையான ஆய்வு மேற்கொண்டு தெரு நாய்களை கட்டுப்படுத்த தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு வழங்க கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 4வது மற்றும் 5வது தெருக்களில் பராரியாக

சுற்றித்திரியும் தெரு நாய்களை கடந்த செப்டம்பர் 2024, அக்டோபர் 2024 மற்றும் ஜனவரி 2025 மாதங்களில் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறி நோய்கடி தடுப்பூசி (ARV) செலுத்தி அதனை 7 நாட்கள் வரை பராமரித்து பின்னர் பிடித்த இடத்திலேயே விடப்பட்டது என்பதும், மண்டலம் 2ல் 5003 நாய்கள் பிடிக்கப்பட்டு வெறி நோய் கடி தடுப்பூசி (ARV) போடப்பட்டு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மீண்டும் விடப்பட்டுள்ளது என்பதும், தாம்பரம் மாநகராட்சியில் மட்டும் சுமாராக 38000 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டது என்பதும், மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி தெரு நாய்களை பிடித்து பராமரிப்பதற்கு காப்பகம் அமைக்க இடம் தேர்வு செய்ய தாம்பரம் மாநகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், இருப்பினும் காப்பகம் அமைக்கும் வரை தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை சுழற்சி முறையில் பிடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் துப்புரவு அலுவலர் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த புகைப்பட நகல் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர் 4வது மற்றும் 5வது தெருக்களில் பராரியாக சுற்றித்திரிந்து பெருகி வரும் தெரு நாய்களை பிடித்து, அந்நாய்களுக்கு உரிய கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி (ARV) போடுவதுடன் தாம்பரம் மாநகராட்சி அலுவலர்கள் அடிக்கடி கள ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் விதிமுறைகளின்படியும் மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படியும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. ஜெ. பிரவீன் குமார்,
கதவு எண் 12/94, 5வது தெரு, மும்மூர்த்தி நகர்,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

(3) உதவி ஆணையர், மண்டலம் 2, தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம்–600 044.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75 சாந்தோம் நெஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உ.திரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்